வினா – விடை தொகுப்பு

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல்

தரம் 11

வலய தகவல் தொடர்பாடல்–
தொழினுட்ப கற்கை நிலையம்
வடமராட்சி

நவம்பர் 2020

www.ikeol.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல்

தரம் 11 வினா - விடை தொகுப்பு

ஆலோசனை வழிகாட்டல்

திருமதி.அ.பார்த்திபன்	வலயக் கல்விப் பணிப்பாளர்
திருமதி.ரா.நிர்மலன்	பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபவிருத்தி)
திரு.மோ.தெய்வேந்திரா	பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்)

இணைப்பாளர்

திரு.அ.மனோகரன்	ஆசிரிய ஆலோசகர் (த.தொ.தொ)

நூலாக்கம்

திரு.இ.சிறிதரன்	முகாமையாளர், கணினி வள நிலையம்
திரு.சி.கிரிசாந்தன்	ஆசிரிய வளவாளர், கணினி வள நிலையம்
திரு.வே.றமணன்	ஆசிரியர், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை


ஆசிரியர்கள்

செல்வி.ம.கீர்த்தனா	விக்னேஸ்வர கல்லூரி
திருமதி.ர.கௌசல்யா	வேலாயுதம் மகா வித்தியாலயம்
திருமதி.க.சுஜந்தினி	தொண்டைமனாறு வீரகத்தி மகா வித்தியாலயம்
திருமதி.இ.எழில்மாதா	குடத்தனை அ.த.க. பாடசாலை
திருமதி.வை.பிரவாகினி	நெல்லியடி மத்திய கல்லூரி
திருமதி.ல.பாமினி	தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்
திருமதி.கா.சிவநிரோஜினி	மணற்காடு றோ.க.த.க பாடசாலை
திருமதி.சி.பாலசரஸ்வதி	மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
திருமதி.கு.சித்ரா	புலோலி மெ.மி.த.க. பாடசாலை
திரு.சு.ஜெயதீஸ்வரன்	வதிரி திரு இருதய கல்லூரி
திரு.க.மணிவண்ணன்	கரணவாய் மகா வித்தியாலயம்
திருமதி.து.சகானா	நாகர்கோவில் மகா வித்தியாலயம்

www.ikedu.lk

கணினி வலையமைப்பு, இணையம் மற்றும் மின்னஞ்சல்

வலையமைப்பு இடத்தியல்



வலையமைப்பு சாதனங்கள்



வழிகாட்டி ஊடகங்கள்



சமூக வலைத்தளங்கள்



வலையமைப்பு இணைப்பிகள்



இணைய உலாவிகள்



மின்னஞ்சல் சேவை வழங்குனர்கள்



உடனடிச் செய்தி செயலிகள்



www.ikeduk

அலகு 01 - பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு செய்நிரல்களை எழுதுதல்

பகுதி - I

1. "ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறையில் அமைந்த படிமுறைகள்" என்பதைக் குறிப்பதற்கு மிகப் பொருத்தமான பதம் பின்வருவனவற்றுள் எது?
   1) கட்டமைப்புக் கட்டுப்பாடு
   2) போலிக்குறிமுறை
   3) பாய்ச்சற் கோட்டுப் படம்
   4) நெறிமுறை

2. போலிக்குறிமுறையில் உள்ளீடு, வெளியீட்டிற்காகப் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொல் அல்லாதது?
   1) input, output
   2) get, show
   3) give, print
   4) read, display

3. தொகுப்பியையும் வரிமொழிமாற்றியையும் பற்றி சரியானது?
   1) செய்நிரல் நிறைவேற்றப்படும் முன்னர் வரிமொழிமாற்றி எல்லாக் கூற்றுக்களையும் இயந்திர மொழியாக மொழி பெயர்க்கின்றது.
   2) செய்நிரல் நிறைவேற்றப்படும் போது தொகுப்பி ஒவ்வொரு கூற்றையும் ஒரு தடவைக்கு ஒன்று வீதம் இயந்திர மொழியாக மொழி பெயர்க்கின்றது.
   3) செய்நிரலை நிறைவேற்றுவதற்குத் தொகுப்பிக்கு வரிமொழிமாற்றி தேவை.
   4) செய்நிரல் நிறைவேற்றப்படும் போது வரிமொழிமாற்றி ஒவ்வொரு கூற்றையும் ஒரு தடவைக்கு ஒன்று வீதம் இயந்திர மொழி அறிவுறுத்தலாகப் பெயர்க்கின்றது

4. கணினி மொழிமாற்றிகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   A- வரிக்கோடலியானது மூலக் குறியினை ஒரே தடவையில் மொழிமாற்றம் செய்யும்.
   B- தொகுப்பிகளானது வரிகோடலிகளை விட செயற்பாட்டு வேகம் குறைந்தவை.
   C- வரிக்கோடலியானது தொகுப்பிகளை விட செயற்பாட்டு வேகம் குறைந்தவை.
   இவற்றில் பிழையான கூற்று?
   1) A மட்டும்
   2) A, B மட்டும்
   3) C மட்டும்
   4) Bமட்டும்

5. கணனி செய்நிரலாக்க மொழிகளில் வலிதான அடையாளங்காணியாகக் கருதப்படக் கூடியது?
   1) 4num
   2) sum 1
   3) x4
   4) x.1

6. கணினி செய்நிரல் தொடர்பாக பிழையான கூற்று?
   1) repeat until மீள்செய்கையில் நிபந்தனை பொய்யாக இருக்கும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் மீள்செயல் தொடங்கப்படும்.
   2) while மீள்செய்கையில் நிபந்தனை ஆரம்பத்திலேயே பரிசீலிக்கப்படுகிறது.
   3) repeat until மீள்செய்கையில் நிபந்தனை பொய்யாக இருக்கும் சந்தர்ப்பங்களில் மீள்செயலானது முடிவுறுத்தப்படுகின்றது.
   4) while, repeat until ஆனது எத்தனை தடவைகள் தொழிற்படும் என்பதை முன்கூட்டியே வரையறுக்கலாம்.

7. செய்நிரல் மொழிகளில் for கூற்று ……. எனும் கட்டுப்பாட்டுக் கட்டமைப்புக்கு ஓர் உதாரணமாகும். மேற்குறித்த வெற்றிடத்தை நிரப்ப மிகப் பொருத்தமானது?
   1) வரிசை
   2) தெரிவு
   3) மீள்செயல்
   4) தொடரி

8. மீண்டும் மீண்டும் ஒரே குறிமுறையினை தட்டச்சு செய்யாது உங்களது பெயரை பத்து தடவைகள் வெளியீடாகப் பெற்றுக் கொள்வதற்கு செய்நிரல்களில் பயன்படுத்தப்படும் கட்டுப்பாட்டு கட்டமைப்பு யாது?
   A) repeat .. until
   B) while .. End while
   C) Sequential
   D) for-loop
   1) A மட்டும்
   2) A, B மட்டும்
   3) A,B, C மட்டும்
   4) A, B, D மட்டும்

www.ictedu.lk


கீழே காட்டப்பட்ட போலிக்குறிமுறையை அடிப்படையாகக் கொண்டு 9, 10ம் வினாக்களுக்கு விடை தருக.

```
N=10
M=10
Repeat
        N=N-2;
        Write(M );
Until N=0;
```

9. இப் போலிக்குறிமுறையின் வருவிளைவு யாது?
   1) 10 10 10 10 10
   2) 10 10 10 10 10 10
   3) 8 6 4 2 0
   4) 8 6 4 2

10. இப் போலிக்குறிமுறை முடியும் போது N இன் பெறுமானம் யாது?
    1) 2 2) 10 3) 0 4) -2

அருகே காட்டப்பட்ட பாய்ச்சற் கோட்டுப்படத்தினை அடிப்படையாகக் கொண்டு 11 தொடக்கம் 14 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக



11. இப்பாய்ச்சற் கோட்டுப்படத்தின் வருவிளைவு யாது.
    1) 17, 24
    2) 10, 7, 4
    3) 5, 10, 20
    4) 17, 24, 41

12. இப்பாய்ச்சற் கோட்டு வரைபடத்தில் எவ்வகையான கட்டுப்பாட்டுக் கட்டமைப்புக்கள் (Control Structure) பயன்படுத்தப்படுகின்றன.
    1) வரிசை முறை, மீள்வருகை
    2) வரிசை முறை, தெரிவு, மீள்வருகை
    3) தெரிவு, மீள்வருகை
    4) வரிசை முறை, தெரிவு

13. இப்பாய்ச்சற் கோட்டு வரைபடத்திற்குப் பொருத்தமான மீள்செயலாற்றம்.
    1) Do While
    2) For Do
    3) Do Until
    4) Repeat Until

14. இப்பாய்ச்சற் கோட்டு வரைபடத்தில் மீள்வருகைகள் எத்தனை தடவைகள் இடம்பெறுகின்றன?
    1) 3 2) 4 3) 2 4) 10

15. ICT வினாத்தாளுக்கு 8 மாணவர்கள் பெற்ற புள்ளிகள் பின்வரும் அணி (array) இல் உள்ளது. மிகவும் கூடிய புள்ளியைப் பெறுவதற்கு பின்வரும் எந்தச் சுட்டிணைப்பு(index) உருப்படியை பயன்படுத்தலாம்?

marks	90	35	78	91	94	88	55	48

1) marks[5] 2) marks[0] 3) marks[4] 4) marks[7]

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

16. போலிக்குறிமுறை கொண்டுள்ள கட்டுப்பாட்டுக் கட்டமைப்புக்கள் எவை?

```
begin
        i=1
        sum = 0
        while i<=5
                if i is odd then
                        sum = sum +i
                end if
                i = i + 1
        end while
end
```

1) வரிசை, தெரிவு
2) மீள்வருகை
3) மீள்வருகை, வரிசை, தெரிவு
4) தெரிவு, மீள்வருகை

17. மேற்குறிப்பிட்ட போலிக்குறிமுறையின் வருவிளைவு?

1) 9 2) 6 3) 10 4) 15

18. i<= 5 எனும் நிபந்தனை i < 5 ஆக மாற்றப்படும் எனின் வருவிளைவு?

1) 9 2) 16 3) 4 4) 15

19. பின்வரும் போலிக்குறிமுறையினைக் நிறைவேற்றிய பின்னர் Hi எனும் சொல் எத்தனை தடவை காட்சிப்படுத்தப்படும்?

```
begin
        i=0
        repeat
                j = i mod 2
                if j = 1 then
                        display “Hi”
                end if
                i = i + 1
        until i = 5
end
```

1) 1 2) 2 3) 3 4) 4

20. பின்வருவனவற்றுள் எது பஸ்கால் செய்நிரலின் தரவு வகையற்றது?

1) boolean 2) char 3) text 4) integer

21. பின்வரும் போலிக்குறிமுறையில் ‘for loop’ எத்தனை தடவைகள் நிறைவேற்றப்படுகின்றன?

```
sum = 0
for i = 0 to 5
        sum = sum + i
        i= i + 1
```


1) 4 2) 6 3) 5 4) 2

22. மேற்குறிப்பிட்ட போலிக்குறிமுறையின் வருவிளைவு?

1) 9 2) 16 3) 4 4) 15

www.ikedu.lk

கீழே காட்டப்பட்ட பாய்ச்சற் கோட்டுப்படத்தினை அடிப்படையாகக் கொண்டு 23 தொடக்கம் 26 வரையான வினாக்களுக்கு விடை தருக



23. பின்வரும் பாய்ச்சற் கோட்டு வரைபடத்தில் எவ்வகையான கட்டுப்பாட்டுக் கட்டமைப்புக்கள் (Control Structure) பயன்படுத்தப்படுகின்றன.
    1) வரிசை முறை, மீள்வருகை
    2) வரிசை முறை, தெரிவு
    3) தெரிவு, மீள்வருகை
    4) வரிசை முறை, மீள்வருகை, தெரிவு

24. இப்பாய்ச்சற் கோட்டுப்படத்தின் வருவிளைவு யாது?
    1) 15 2) 17
    3) 11 4) 13

25. மேலுள்ள பாய்ச்சற் கோட்டுப் படத்தில் மீள்வருகைகள் எத்தனை தடவைகள் இடம்பெறுகின்றன?
    1) 3 2) 4
    3) 5 4) 6

26. மேலுள்ள பாய்ச்சற் கோட்டுப் படத்தில் வரும் மீள்வருகை முறை எது?
    1) while loop 2) for loop
    3) repeat…. Until 4) a, b சரி

கீழே காட்டப்பட்ட பஸ்கால் செய்நிரலை அடிப்படையாகக் கொண்டு 27, 28ம் வினாக்களுக்கு விடை தருக

```
BEGIN
        count = 1
        num = 1
        WHILE (count<=5)
        DO {
                DISPLAY num
                num = num + num
                count = count + 1
        }
        END WHILE

END
```

27. இப் பஸ்கால் செய்நிரலின் முதலாவது மீள்செய்கையின் பின்னர் count, num இன் பெறுமானம்?
    1) count = 2, num = 1 2) count = 1, num = 1
    3) count = 3, num = 2 4) count = 2, num = 2

28. இப் பஸ்கால் செய்நிரலின் இறுதி வருவிளைவு யாது?
    1) 8 2) 16 3) 32 4) 64

www.lkedu.lk

29. பின்வரும் பஸ்கால் செய்நிரலைக் கருதுக.

```
VAR x: INTEGER;
BEGIN
        x := 1;
        REPEAT
                WRITELN (x)
                x := x + 1;
        UNTIL x = 3;
END.
```

மேற்குறித்த செய்நிரலின் வெளியீடு

1) 1 2 3 2) 1 2 3) 1
2
3 4) 1
2

30. கீழ்வரும் போலிக்குறிமுறை செயற்படுத்தப்படும் போது ABC என்னும் சொல் எத்தனை தடவைகள் காட்சிப்படுத்தப்படும்?

```
n=0
REPEAT
        n=n+1
UNTIL n>3
DISPLAY “ABC”
WHILE n>3
        DISPLAY “ABC”
        n=n-1
END WHILE
```


1) 5 2) 2 3) 3 4) 4

31. பின்வரும் போலிக் குறிமுறையின் வெளியீடு யாது?

```
n= 2
m= 1
DO
        n =n + m
        m =m + 1
WHILE m < 4
DISPLAY n
```

1) 5 2) 8 3) 12 4) 4

கீழே காட்டப்பட்ட பாய்ச்சற் கோட்டுப்படத்தினை அடிப்படையாகக் கொண்டு 32, 33, 34ம் வினாக்களுக்கு விடை தருக




www.lkedu.lk

32. மேலுள்ள பாய்ச்சல்கோட்டுப் படத்தில் காணப்படும் கட்டுப்பாட்டுக்கட்டமைப்புகள்?
1) வரிசைமுறை, மீள்வருகை முறை
2) வரிசைமுறை, தெரிவுமுறை
3) தெரிவுமுறை, மீள்வருகை முறை
4) வரிசைமுறை, மீள்வருகை முறை, தெரிவுமுறை

33. மேற்குறித்த பாய்ச்சல்கோட்டுப் படத்தின் வருவிளைவு?
1) 40 2) 46 3) 35 4) 37

34. மீள்வருகையை முடிவுறுத்தும் A இன் பெறுமானம்?
1) 5 2) 0 3) 4 4) 6

35. அருகில் தரப்பட்டுள்ள பாய்ச்சற் கோட்டுப் படத்தின் வருவிளைவு யாது?
1) 4
2) 5
3) 3
4) 10



36. பின்வரும் போலிக்குறிமுறைக்கு முறையே 5, 2, 12 எனும் உள்ளீடுகளை வழங்கும் போது அதன் வெளியீடு யாதாக அமையும்?

```
begin
        c=10
        input x
        while x < c do
                x=x+c
                c=c-2
        print x
        end
```

1) 12, 8, 10 2) 10, 10, 10 3) 10, 8, 12 4) 15, 12, 12


37. மேலுள்ள வினாவில் c இற்குரிய பெறுமதி 12 ஆக அதிகரிப்பின் உள்ளீடுகள் மாறாதிருக்கும் போது வெளியீடு யாதாக அமையும்?
1) 17, 14, 12 2) 10, 12, 12 3) 12, 10, 14 4) 15, 12, 12

38. பஸ்கால் செய்நிரலில் வலிதான அடையாளங்காணியானது பின்வருவனவற்றில் எது?
1) 7abc 2) abc@ 3) if 4) abc7

39. பின்வரும் பாய்ச்சற் கோட்டு குறியீடுகளில் ABC என்பனவற்றை சரியாக குறிக்கும் விடை யாது?


A


B


C

1) A - உளளீடு/ வருவிளைவு B – தீர்மானம் C – முறைவழியாக்கம்
2) A - முறைவழியாக்கம் B – உள்ளீடு/ வருவிளைவு C – தீர்மானம்
3) A - உள்ளீடு/ வருவிளைவு B – முறைவழியாக்கம் C – தீர்மானம்
4) A - முறைவழியாக்கம் B – தீர்மானம் C – உள்ளீடு/ வருவிளைவு

www.ikeduk.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

40. 126.25 எனும் எண்ணானது பஸ்கால் கணினிச் செய்நிரலில் கருதப்படும் பொருத்தமான தரவு வகையானது?

1) integer 2) boolean 3) real 4) number

41. பின்வரும் பஸ்கால் செய்நிரலில் செய்நிரல் நிறைவேற்றப்பட்ட பின்னர் கிடைக்கும் வருவிளைவு?

```
Program sample(input, output)
Var n : integer;
Begin
        n := 1;
        Repeat
                Write(n);
                n := n+1;
        until n<=3;
        write (n);
end
```

1) 1, 2 2) எவ்விளைவும் கிடைக்காது 3) 1 4) 1, 2, 3

கீழ்வரும் பஸ்கால் செய்நிரலினைப் பயன்படுத்தி 42 தொடக்கம் 44 வரையான வினாக்களுக்கு விடை தருக.

```
program ten_numbers ( input, output ); {Simple Array program}
var num : array[0..9] of integer;
i : integer;
begin
        writeln ( 'Enter Ten Numbers' );
        for i := 0 to 9 do
        begin
                read ( num[i] );
        end;
end
```

42. மேலுள்ள பஸ்கால் செய்நிரலில் மாறியாக அடையாளங்காணக் கூடியது.

1) writln 2) read ln 3) num 4) real

43. மேலுள்ள பஸ்கால் செய்நிரலில் குறிப்பு ஒன்று காட்டப்பட்டுள்ளது. இங்கு குறிப்பு இடம்பெற்றுள்ள வரி இலக்கமானது

1) 8 2) 6 3) 2 4) 1

44. மேலுள்ள பஸ்கால் செய்நிரலில் 40, 57, 24, 76, 33, 27, 32, 09, 88, 98 எனும் எண்கள் உள்ளீடாக வழங்கப்பட்டுள்ளது எனக் கொள்க. num[5] + num[1] இன் பெறுமானம் யாது?

1) 67 2) 77 3) 121 4) 84

www.ikedu.lk


பகுதி - II

1.

a) பின்வரும் பாய்ச்சற் கோட்டுப் படத்தை கவனத்தில் கொள்க.

i) இதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய வருவிளைவினை எழுதுக?

ii) இதற்கான போலிக்குறிமுறையை எழுதுக?



b) கீழேயுள்ள போலிக்குறிமுறையிற்கு பாய்ச்சற் கோட்டுப் படத்தை வரைக?

```
begin
        input marks as m
        if marks > 75 then
                grade = 'A'
        else if marks > 65 then
                grade = 'B'
        elseif marks > 55 then
                grade = 'C'
        else if marks > 35 then
                grade = 'S'
        else
                grade = 'F'
        endif
        endif
        endif
        endif
end.
```

2.

a) உள்ளீடு செய்யப்படும் 10 எண்களிலிருந்து சிறிய எண்ணை காண்பதற்கான பாய்ச்சற் கோட்டுப் படத்தை வரைக.

b) மேலுள்ள பாய்ச்சற் கோட்டுப் படத்துக்கான போலிக் குறிமுறையை எழுதுக.


c) பஸ்கால் (pascal) கணினி மொழியை பயன்படுத்தி எழுதப்படும் செய்நிரல் ஒன்றில் பயன்படுத்தப்படும் ஒதுக்கப்பட்ட சொற்கள் (reserved words) இரண்டை தருக.

d) பஸ்கால் மொழியில் பயன்படுத்தப்படும் தரவு வகைகள் இரண்டை குறிப்பிடுக.

www.lkedu.lk

3.

a) பின்வரும் பாய்ச்சற் கோட்டுப் படத்தை கவனத்தில் கொள்க.



i) இதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய விளைவுகள் யாது?

ii) இதற்கான போலிக்குறிமுறையை எழுதுக.

b) கீழேயுள்ள போலிக்குறிமுறையின் வருவிளைவு யாது?

```
count=1
sum=0
WHILE count <= 5 DO
        sum=sum+sum
        count=count+1
        sum=sum + count
END WHILE
Average=sum/(count-1)
Display sum, average
```

www.ikedu.lk

4. பின்வரும் பஸ்கால் செய்நிரலினை கருத்திற்கொள்க.

```
1. program project1:
2. var c : integer;
3.
4. begin
5. writeln("Enter the Temperature :");
6. readln(c);
7. if c > 20 then
8. writeln("HOT Climate")
9. else
10. writeln("COOL Climate");
11.
12. readln();
13. end.
```

a) மேற்தரப்பட்ட பஸ்கால் செய்நிரலுக்குரிய போலிக்குறிமுறையினை எழுதுக?

b) மாறி c இற்கான பெறுமானமாக 30 இனை உள்ளீடாக வழங்கினால் மேலுள்ள பஸ்கால் செய்நிரலின் வெளியீடு எதுவாக அமையும்?

c) மேற்தரப்பட்ட பஸ்கால் செய்நிரலில் 6, 7 வது வரிகளில் உள்ள குறிமுறையினை பாய்ச்சல் கோட்டுப் படத்தில் காட்டுவதற்காக பயன்படுத்தப்படும் உருக்களை வரைந்து, பொருத்தமான கூற்றுக்களையும் எழுதிக் காட்டுக.

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945
LEARN EASY KNOWLEDGE IS POWER
www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்




இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

5. ஓர் ஆசிரியர் 20 மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள் கணித பாடம் மற்றும் விஞ்ஞான பாடம் ஆகியவற்றில் அவர்களின் விருப்பத்தை அறிகின்றார். A தொடக்கம் E வரையில் வெற்றிடங்களுடன் முகப்படையாளமிடப்பட்டுள்ள பதங்களைக் கொண்ட பாய்ச்சற் கோட்டுப்படம் பின்வருமாறு.



மேலே A தொடக்கம் E வரையான முகப்படையாளங்களுக்கு வரக்கூடிய சரியான பதங்களை எழுதுக.

www.ikedu.lk

அலகு: 01 - பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு செய்நிரல்களை எழுதுதல்
விடைகள்

பகுதி I

1)	4	11)	4	21)	2	31)	2	41)	1
2)	3	12)	1	22)	4	32)	1	42)	3
3)	4	13)	4	23)	1	33)	3	43)	4
4)	2	14)	1	24)	2	34)	5	44)	4
5)	3	15)	3	25)	3	35)	2		
6)	3	16)	3	26)	3	36)	4		
7)	3	17)	1	27)	4	37)	1		
8)	4	18)	3	28)	2	38)	4		
9)	1	19)	2	29)	4	9)	3		
10)	3	20)	3	30)	2	40)	3		

பகுதி II

1)

a)


i) 15

ii)
```
begin
x = 21
while x > 15
        x = x -3
end while
display x
end
```

www.lkedu.lk

b)


i)



www.ikedu.lk

2)

a)



www.ikedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

b) begin

```
input number n
count = 0
min = n
while count < 10
        input number n
        if min > n then
                min = n
        end if
        count = count + 1
end while
display min
```

end

c) begin , end, while, and, array, for, function, if

c) integer, real, Boolean, character, array, string

3)

a)

i) 1 2 3 1 2 3 1 2 3

ii) begin

```
a= 1
b=1
while a<= 3
        if b <= 3 then
                a=a+1
                b=1
        else
                display b
                b = b + 1
        end if
end while
```

end

b) 88, 17.6

www.lkedu.lk

4)


a) Begin

```
Number c
Output (“ Enter the Temperature :”)
Input c
If c > 20 then
        Display (“Hot Climate”)
Else
        Display (“Cool Climate”)
End if

End
```

b) Hot Climate

c)



5)

A = 0

B = Std_total

C = Maths_count + 1

D = Maths_count

E = Science_count

www.lkedu.lk

அலகு – 02 தகவல் முறைமை விருத்திச் செயன்முறை
பகுதி I

1. முறைமை மூலகம் அல்லாதது?
   1) உள்ளீடு(Input)
   2) செயற்பாடு(Process)
   3) வெளியீடு(Output)
   4) நினைவகம் (Memory)

2. முறைமை அபிவிருத்தி வாழ்க்கை வட்டத்தின் படிமுறை அல்லாதது?
   1) தேவைகளை இனங்காணல்
   2) தீர்வினை குறிமுறைப்படுத்தல்
   3) தீர்வினை நடைமுறைப்படுத்தல்
   4) நீர்வீழ்ச்சி மாதிரியம்

3. முறைமைப் பகுப்பாய்வின்போது தேவையான தரவுகளை சேகரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன முறைகளில் ஒன்று?
   1) ஊடாட்ட விருத்தி மாதிரியம்
   2) மாதிரிகள்.
   3) சுருளியுரு மாதிரியம்
   4) மூலவகை மாதிரியம்

4. தீர்வினை வடிவமைத்தல் என்பதனுள் உள்ளடக்குவது யாது?
   1) முறைமையின் மென்பொருள் கட்டமைப்பினை இனங்காணல்.
   2) முறைமையின் குறிக்கோள்
   3) முறைமையிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற விடயங்கள்
   4) கணினி மொழி மூலமாக செய்நிரலாக்கம்

5. தேவைகளை இனங்காணல் என்பதனுள் உள்ளடக்குவது யாது?
   1) முறைமையின் குறிக்கோள்
   2) கணினி மொழி மூலமாக செய்நிரலாக்கம்
   3) முறைமையின் மென்பொருள் கட்டமைப்பினை இனங்காணல்
   4) தரவுத்தளங்களைத் திட்டமிடல்

6. தீர்வினைக் குறிமுறைப்படுத்தல் என்பதனுள் உள்ளடக்குவது யாது?
   1) முறைமையின் குறிக்கோள்
   2) கணினி மொழி மூலமாக செய்நிரலாக்கம்
   3) முறைமையின் மென்பொருள் கட்டமைப்பினை இனங்காணல்
   4) தரவுத்தளங்களைத் திட்டமிடல்

7. முறைமையின் ஒவ்வொரு கூறுக்கும் தனித்தனியாக உள்ளீடுகளை வழங்கி அக்கூறினால் எதிர்பார்க்கப்படும் வருவிளைவு பெறப்படுகிறதா எனச் சோதிக்கும் சோதனை?
   1) அலகுச் சோதனை
   2) ஒருங்கிணைப்புச் சோதனை
   3) முறைமைச் சோதனை
   4) ஏற்புடைமைச் சோதனை

8. மென்பொருள் அபிவிருத்தியின் போது மென்பொருள் கூறுகூறாக அபிவிருத்தி செய்யப்படுகின்றது. அக்கூறுகள் ஒன்றாக்கப்பட்டு பரீட்சித்தல் மேற்கொள்ளப்படும் சோதனை?
   1) அலகுச் சோதனை
   2) ஒருங்கிணைப்புச் சோதனை
   3) முறைமைச் சோதனை
   4) ஏற்புடைமைச் சோதனை

9. முழுமையான முறைமைக்கும் உரிய உள்ளீடுகளுக்கு ஏற்ப எதிர்பார்த்த வருவிளைவுகள் கிடைக்கப் பெற்றனவா எனப் பரீட்சிக்கப்படும் சோதனை?
   1) அலகுச் சோதனை
   2) ஒருங்கிணைப்புச் சோதனை
   3) முறைமைச் சோதனை
   4) ஏற்புடைமைச் சோதனை

10. முறைமையின் சேவைப்பயனர் மூலம் இறுதியாக முறைமை சோதனைக்கு உட்படுத்தப்பட்டு முறைமை ஏற்றுக்கொள்ளப்படுல் சோதனை?
    1) அலகுச் சோதனை
    2) ஒருங்கிணைப்புச் சோதனை
    3) முறைமைச் சோதனை
    4) ஏற்புடைமைச் சோதனை

www.ikedu.lk

11. இருக்கின்ற முறைமையை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக புதிய முறைமையை செயற்படுத்தும் செயற்பாடு?
    1) சமாந்தர செயற்படுத்தல் 2)வெள்ளோட்டமுறைச் செயற்படுத்தல்.
    3) கட்டங்களாகச் செயற்படுத்தல் 4) நேரடியாகச் செயற்படுத்தல்

12. இருக்கின்ற முறைமையையும் , புதிய முறைமையையும் சமாந்தரமாக ஒரு மாத கால அவகாசத்தில் நடைமுறைப்படுத்தல். புதிய முறைமை வெற்றிகரமானதெனின் பழையதை நீக்கி புதியதை நடைமுறைப்படுத்தல்.
    1) சமாந்தர செயற்படுத்தல் 2) வெள்ளோட்டமுறைச் செயற்படுத்தல்.
    3) கட்டங்களாகச் செயற்படுத்தல் 4) நேரடியாகச் செயற்படுத்தல்

13. இந்த முறைமை சிறிய பிரதேசமொன்றில் முதலில் நிறுவப்படும். இதன்போது முழுமையான முறைமை தெரிவு செய்யப்பட்ட மாவட்டத்தில் முதலில் நிறுவப்பட்டு செயற்படுத்தல் மேற்கொள்ளல்.
    1) சமாந்தர செயற்படுத்தல் 2) வெள்ளோட்டமுறைச் செயற்படுத்தல்.
    3) கட்டங்களாகச் செயற்படுத்தல் 4) நேரடியாகச் செயற்படுத்தல்

14. இங்கு தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் கட்டங்களாக தனித்தனியே பிரதேசத்தில் அல்லது கிளையில் படிப்படியாக நிறுவப்படும்.
    1) சமாந்தர செயற்படுத்தல் 2) வெள்ளோட்டமுறைச் செயற்படுத்தல்.
    3) கட்டங்களாகச் செயற்படுத்தல் 4) நேரடியாகச் செயற்படுத்தல்

15. முறைமை அபிவிருத்திச் செயன்முறையின் படிமுறைகளை ஒழுங்கில் கொண்ட தொகுதி
    1) தேவைகளை இனங்காணல், தீர்வினை வடிவமைத்தல், தீர்வினைச் சோதித்துப் பார்த்தல், தீர்வினைக் குறிமுறைப்படுத்தல்
    2) தேவைகளை இனங்காணல், தீர்வினைக் குறிமுறைப்படுத்தல், தீர்வினை வடிவமைத்தல், தீர்வினைச் சோதித்துப் பார்த்தல்
    3) தேவைகளை இனங்காணல், தீர்வினைக் குறிமுறைப்படுத்தல், தீர்வினைச் சோதித்துப் பார்த்தல், தீர்வினை வடிவமைத்தல்
    4) தேவைகளை இனங்காணல், தீர்வினை வடிவமைத்தல், தீர்வினைக் குறிமுறைப்படுத்தல், தீர்வினைச் சோதித்துப் பார்த்தல்,

பகுதி II

1. முறைமை (System) என்றால் என்ன?
2. முறைமை மூலகங்கள் எவை? (Elements of a system)
3. தகவல் முறைமை என்றால் என்ன? (Information System)
4. கைமுறை தகவல் முறைமை என்றால் என்ன? (Manual Information System)
5. கைமுறை தகவல் முறைமையின் தீமைகள் சில தருக?
6. கணினியை அடிப்படையாகக் கொண்ட முறைமை என்றால் என்ன?
7. முறைமை அபிவிருத்தி வாழ்க்கைவட்ட படிமுறைகள் எவை?
8. தேவைகளை இனங்காணல் என்பதனுள் உள்ளடங்குபவை யாவை?
9. முறைமைப் பகுப்பாய்வின்போது தேவையான தரவுகளை சேகரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற முறைகள் எவை?
10. தீர்வினை வடிவமைத்தல் என்பதனுள் உள்ளடங்குபவை யாவை?
11. தீர்வினைக் குறிமுறைப்படுத்தல் என்பதனால் கருதப்படுவது யாது?
12. தீர்வினைச் சோதிக்கும் படிமுறைகளைத் தருக?
13. முறைமையை நிறுவும் முறைகள் யாவை?
14. முறைமையை பராமரித்தல் என்பதனுள் உள்ளடங்குபவை யாவை?
15. முறைமை விருத்தி மாதிரியங்கள் எவை?
16. நீர்வீழ்ச்சி மாதிரியத்தை வரைக?
17. நீர்வீழ்ச்சி மாதிரியத்தின் குறைபாடுகள் சில தருக?
18. ஊடாட்ட விருத்தி மாதிரியத்தை வரைக?
19. ஊடாட்ட விருத்தி மாதிரியத்தின் இயல்புகள் யாவை?

www.ikeau.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

அலகு – 02 தகவல் முறைமை விருத்திச் செயன்முறை
விடைகள்

பகுதி 1

1	4	6	2	11	4
2	4	7	1	12	1
3	2	8	2	13	2
4	1	9	3	14	3
5	1	10	4	15	4

பகுதி II

1. குறித்த நோக்கத்தை அடைவதன் பொருட்டு ஒன்றோடு ஒன்று அகத்தொடர்புடைய பல மூலகங்கள் ஒன்று சேர்ந்து பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்குப் பொருத்தமான வழிகளில் உட்படும் ஓர் ஒழுங்கு முறையான அமைப்பே முறைமையாகும்.
   உதாரணம் : கல்வி முறைமை, அரசியல் முறைமை, கணினி முறைமை, கணக்கியல் முறைமை.

2. உள்ளீடு (Input), செயற்பாடு (Process), வெளியீடு (Output) .
   உதாரணம் : பாடசாலை என்னும் முறைமையில் உள்ள மூலகங்களாகப் பின்வருவன கருதப்படுகின்றது. உள்ளீடு : பிள்ளைகள். ஆசிரியர்கள்.
   செயற்பாடு : கற்றல் கற்பித்தல்
   வெளியீடு : கல்வி அறிவுடைய மாணவர்கள் அல்லது சிறந்த மாணவர்கள்.

3. ஓர் நிறுவனத்தின் சகல செயற்பாடுகளுக்கும் தேவையான தகவல்களை வழங்கும் முறைமை தகவல் முறைமையாகும்.

4. கைமுறை தகவல் முறைமை என்பது நபர்களின் கைகளால் தரவகளை முறைவழிப்படுத்தலுக்குட்படுத்தல் ஆகும்.
   உதாரணம் :
   - கணக்குகளைப் பதிவு செய்தல் (Book – Keeping system)
   - பாடசாலை மாணவர்களின் வரவுப்பதிவு

5. மனிதர்களால் செய்யப்படும் வேலையானது நம்பிக்கை அற்றது.
   மனித மூளையானது மெதுவாகச் செயற்படும் தன்மை உடையது.
   மனிதனால் ஒருவேலையைத் தொடர்ச்சியாகச் செய்யும் போது களைப்புத்தன்மை ஏற்படுவதுடன் சலிப்புத்தன்மையும் ஏற்படுகின்றது.

6. கணினியைப் பயன்படுத்தி தரவுகளை உள்ளீடு செய்து செயன்முறைக்குட்படுத்தி தகவல்களாக மாற்றும் முறைமை ஆகும்.

7. தேவைகளை இனங்காணல்
   தீர்வினை வடிவமைத்தல்
   தீர்வினை குறிமுறைப்படுத்தல்
   தீர்வினை சோதித்துப் பார்த்தலும் தவறு நீக்கலும்
   தீர்வினை நடைமுறைப்படுத்தல்
   முறைமையைப் பராமரித்தல்

8. முறைமையின் குறிக்கோள் , முறைமையிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற விடயங்கள் , உள்ளீடுகள் வருவிளைவுகள் , வினைத்திறன்

9. அறிக்கைகள், கோவைகள், அவதானித்தல், நேர்காணல், வினாக்கொத்து, மூலவகை மாதிரிகள்.

www.ikedu.lk

10. மென்பொருள் கூறுகளை இனங்காணல்
முறைமையின் மென்பொருள் கட்டமைப்பினை இனங்காணல்.
இடைமுகங்களை வடிவமைத்தல்
தரவுத்தளங்களைத் திட்டமிடல்
முறைமை வடிவமைப்பினை இனங்காணல்.

11. வடிவமைப்பின்போது இனங்காணப்பட்ட கூறுகள் , உபதொகுதிகள் ஆகியன கணினி மொழி மூலமாக செய்நிரலாக்கம் செய்யப்படுதல் தீர்வினைக் குறிமுறைப்படுத்தல் ஆகும்.

12. முறைமையில் வழுக்கள் இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். முறைமை பரீட்சிக்கப்படும் படிகள் ஒழுங்கு முறையில்
1) அலகுச் சோதனை:—முறைமையின் ஒவ்வொரு கூறுக்கும் தனித்தனியாக உள்ளீடுகளை வழங்கி அக்கூறினால் எதிர்பார்க்கப்படும் வருவிளைவு பெறப்படுகிறதா எனச் சோதித்தல்.
2) ஒருங்கிணைப்புச் சோதனை- ஒவ்வொரு அலகும் உரிய முறையில் ஒன்றிணைக்கப்பட்டு பரீட்சிக்கப்படும். உள்ளிடப்பட்ட தரவுகளுக்கு ஏற்ப இடைமுகமானது பரீட்சிக்கப்படும்.
3) முறைமைச் சோதனை- முழுமையான முறைமைக்கும் உரிய உள்ளீடுகளுக்கு ஏற்ப எதிர்பார்த்த வருவிளைவுகள் கிடைக்கப் பெற்றனவா எனப் பரீட்சிக்கப்படும்.
4) ஏற்புடைமைச் சோதனை- முறைமையின் சேவைப்பயனர் மூலம் இறுதியாக முறைமை சோதனைக்கு உட்படுத்தப்பட்டு முறைமை ஏற்றுக்கொள்ளப்படல்.


13. 1) நேரடியாகச் செயற்படுத்தல் - இருக்கின்ற முறைமையை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக புதிய முறைமையை செயற்படுத்தல்.
2) சமாந்தர செயற்படுத்தல்- இருக்கின்ற முறைமையையும் , புதிய முறைமையையும் சமாந்தரமாக ஒரு மாத கால அவகாசத்தில் நடைமுறைப்படுத்தல். புதிய முறைமை வெற்றிகரமானதெனின் பழையதை நீக்கி புதியதை நடைமுறைப்படுத்தல்.
3) வெள்ளோட்டமுறைச் செயற்படுத்தல். இந்த முறைமை சிறிய பிரதேசமொன்றில் முதலில் நிறுவப்படும். இதன்போது முழுமையான முறைமை தெரிவு செய்யப்பட்ட மாவட்டத்தில் முதலில் நிறுவப்பட்டு செயற்படுத்தலை மேற்கொள்ளல்.
4) கட்டங்களாகச் செயற்படுத்தல்- இங்கு தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் கட்டங்களாக தனித்தனியே பிரதேசத்தில் அல்லது கிளையில் படிப்படியாக நிறுவப்படும்.

14. சோதனையில் இனங்காணப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்தல்.
பயனரின் புதிய தேவைகளைப் பூர்த்தி செய்தல
தொழினுட்ப மாற்றத்திற்கிணங்க முறைமையை புதிய தொழினுட்ப அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக மாற்றல்.

15. 1) நீர்வீழ்ச்சி மாதிரியம்
2) ஊடாட்ட விருத்தி மாதிரியம்
3) மூலவகை மாதிரியம்
4) சுருளியுரு மாதிரியம்


www.ictedu.lk

16.



17. 1) நடைமுறையில் பயனர்களினால் தமது தேவைப்பாடுகளை ஆரம்பநிலையில் முற்றுமுழுதாக வெளிப்படுத்துவது கடினம்.
    2) மென்பொருள் அபிவிருத்தி செயல்பட்டதன் முடிவின் மாத்திரமே பயனர்கள் அதன் அனுபவத்தை பெறமுடியும்.
    3) .அனைத்து தேவைகளையும் அறிந்த பின்னரே மென்பொருள் விருத்தியை ஆரம்பிக்க வேண்டும்
    4) .பயனரது தேவைகள் மாற்றமடையும் போது இம்மாதிரியியல் பொருத்தமற்றது.
    5) .முடிவுப்பொருளுக்கு நீண்டகாலம் எடுக்கும்.
    6) .இம் மாதிரியில் மீள் அபிவிருத்தி செய்வதற்கு உகந்ததல்ல

18.



19.
    1) ஒரு தடவையில் சிறு பகுதிகளாக மீண்டும் மீண்டும் ஊடாட்டத்துக்குள்ளாவதும் அவ்வாறான எல்லா ஊடாட்டங்களின்போதும் மேம்படுத்தும் வகையிலான முறைமையை விருத்தி செய்தல்.
    2) முறைமை விருத்தியாளர்கள் முன்னைய படிமுறைகளில் பெற்றுக் கொண்ட அறிவினைப் பயன்படுத்த முடிதல்.
    3) முறைமையின் தேவைகள் எளிமையாக நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலமாக பிரதான படிமுறை ஆரம்பமாகும்.
    4) முறைமை முழுமையாக விருத்தி செய்யப்படும்வரை ஊடாட்டம் மூலம் விருத்தி செய்யப்படும்.

www.ikedu.lk

அலகு 03 - இணையம் மற்றும் மின்னஞ்சல்
பகுதி I

1. சீர்மை வள இடப்படுத்திக்கு உதாரணமாக அமைவது.
   1) doenets@gmail.com 2) name.docx
   3) http ://www.moe.gov.lk 4) 198.168.0.1

2. இணையத்திலுள்ள ஒவ்வொரு கணினியையும் தனித்துவமாக அடையாளம் காண உதவுவது.
   1) http 2) ஆள்களப் பெயர்
   3) URL 4) IP முகவரி

3. பின்வருவனவற்றில் ஆள்களப் பெயர் யாது?
   1) http 2) nie.lk 3) www 4) srilanka.html

4. பின்வருவனவற்றுள் சரியான இணையச் செம்மை நடப்பொழுங்கு முகவரி (IP Address) எது?
   1) 110.140.258.1 2) 192.168.1.1.1 3) 281.168.1.1 4) 10.20.8.8

5. ஒரு மின்னஞ்சல் கணக்கில் அழிக்கப்பட்ட மின்னஞ்சல்கள் சேமிக்கப்பட்டிருக்கும் பகுதி எது?
   1) Sent 2) Draft 3) Spam/Junk 4) Delete/Trash

6. உலகளாவிய வலையில் (WWW) உள்ள ஒவ்வொரு வலைப்பக்கமும் கொண்டிருக்கும் தனித்துவ அடையாளங்காணி (identifier).
   1) சீர்மை வள இடப்படுத்தி (URL) 2) மின்னஞ்சல் முகவரி
   3) மீ இணைப்பு (hyperlink) 4) IP முகவரி

7. http://www.moe.gov.lk எனும் சீர்மை வள இடப்படுத்தியில் மேல்மட்ட ஆள்களமாக அமைவது.
   1) http 2) www 3) .gov.lk 4) .lk

8. பின்வருவனவற்றில் இணைய சேவையை வழங்கும் கணினியாக அமையாதது.
   1) அஞ்சல் சேவையகம் 2) வலைச் சேவையகம்
   3) தனியாள் கணினி 4) DNS சேவையகம்

9. தகவல்களை இணைய வலையமைப்பிலுள்ள கணினிகளுக்கிடையே ஊடுகடத்துவதற்குப் பயன்படுத்தப்படுவது.
   1) www 2) http 3)URL 4) DNS

10. இணையம் தொடர்பான செம்மை நடப்பொழுங்கிற்கு உதாரணமாக அமையாதது.
    1) HTML 2) SMTP 3) TCP/IP 4) FTP

11. பின்வருவனவற்றுள் எது இணைய சேவையாக அமையாதது.
    1) உலகளாவிய வலை 2) கோப்புப் பரிமாற்றம்
    3) வலைமேலோடிகள் 4) கோப்புப் பகிர்வு

12. பின்வருவனவற்றில் கல்விசார் இணையத்தளமாக அமையாதது.
    1) www.edupub.gov.lk 2) www.moe.gov.lk 3) www.gov.lk 4) www.nie.lk

13. எமது நாட்டிற்குரிய ஆள்களம்.
    1) uk 2) lk 3) us 4) in

www.ikedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

14. IP முகவரிப் பரிமாற்றல் கட்டுப்பாட்டிற்கான செம்மை நடப்பு வழக்கு எது?
    1) FTP 2) TCP/IP 3) SMTP 4) HTTP

15. தீக்காப்புச் சுவர் வசதி இல்வாத போதும் முகில் கணினி சேவை மூலமாக அச்சேவையினை பெற முடிதல் முகில் கணினியின் எச்சேவையாகும்?
    1) உட்கட்டமைப்பு சேவை 2) அபிவிருத்திச் சூழல் சேவை
    3) மென்பொருள் சேவை 4) மென்பொருள் விருத்திச் சேவை

பகுதி II

01. இணையம் என்றால் என்ன?
02. IP முகவரி என்றால் என்ன?
03. செம்மை நடப்பு வழக்கு(protocol) எனப்படுவது யாது?
04. இணையத்தின் சேவைகள் ஐந்து குறிப்பிடுக.
05. உலகளாவிய வலை(www) என்றால் என்ன?
06. இணையத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
07. வலை மேலோடி(web browser) என்பது யாது?
08. ஹேக்கிங்(Hacking) எனப்படுவது யாது?
09. தேடற் பொறிகள்(Search Engine) என்றால் என்ன?
10. தேடற் பொறிகளுக்கு உதாரணம் நான்கை குறிப்பிடுக.
11. தொடர்பாடலுக்காக இணையத்தை பயன்படுத்தும் முறைகள் நான்கை குறிப்பிடுக.
12. மின் அஞ்சல்(e-mail) எனப்படுவது யாது?
13. மின் அஞ்சல் சேவையினால் கிடைக்கக் கூடிய அனுகூலங்கள் இரண்டை குறிப்பிடுக
14. மின் அஞ்சல் முகவரியின் மூன்று பகுதிகளையும் குறிப்பிட்டுவதுடன் உதாரணம் ஒன்றையும் குறிப்பிடுக.
15. காணொளிக் கருத்தரங்கு(video conference) என்றால் என்ன?
16. காணொளிக் கருத்தரங்கை மேற்கொள்ள அவசியமானவை நான்கை குறிப்பிடுக.
17. சமூக வலைத்தளங்கள (Social networks) என்றால் என்ன? சமூக வலைத்தளங்களுக்கு உதாரணம் 2 எழுதுக.
18. முகில் கணினி எண்ணக்கரு(cloud computing) என்றால் என்ன?
19. முகில் கணினி எண்ணக்கருவின் அனுகூலங்கள் நான்கை குறிப்பிடுக.
20. முகில் கணினி எண்ணக்கருவின் பிரதிகூலங்கள் இரண்டை குறிப்பிடுக.
21. முகில் கணினி எண்ணக்கருவின் பிரதான சேவைகள் மூன்றையும் குறிப்பிடுக.
22. சேவையகக் கணினி (server computer) என்பது யாது?
23. பயனர் கணினி (client computer) என்பது யாது?
24. தரவிறக்கம் (downloading) எனப்படுவது யாது?
25. பதிவேற்றம் (uploading) எனப்படுவது யாது?

02. பின்வரும் சீர்மை வள இடப்படுத்தியை(Uniform Resource Locator -URL) பயன்படுத்தி கீழ் வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

    http://www.doenets.lk/exam/result.html

1. மேற்படி URL இல் காணப்படும் செம்மை நடப்பு வழக்கு(protocol) யாது?
2. WWW இன் விரிவாக்கத்தை எழுதுக?
3. மேற்படி URL இல் காணப்படும் ஆள்கள பெயர் (Domain Name) யாது?
4. மேற்படி URL இல் காணப்படும் உறை(folder) யாது?
5. மேற்படி URL இன் வலைப்பக்கத்தின் பெயர் யாது?

www.ikedu.lk

03. பின்வருவனவற்றுள் சரியான IPV4 முகவரியினை இனங்கண்டு சரியான முகவரியாயின் சரி எனவும் பிழையான முகவரியாயின் பிழை எனவும் எழுதுக.

1) 176 . 80 . 156 . 25 ..... 2) 10 . 10 . 1. 1 . 4 .....
3) 255 . 255 . 255 . 254 ..... 4) 191 . 192 . 168 . 1 .....
5) 176 . 256 . 1 . 10 ..... 6) 168 . 225 . 200 . 40 .....

04. பின்வரும் உயர்மட்ட ஆள்கள பெயர்களுக்குரிய விளக்கத்தை குறிப்பிடுக.

உயர்மட்ட ஆள்களம் (Top level name)	விளக்கம்
org	
com	
gov	
edu	
net	

05. பின்வரும் செம்மை நடப்பு வழக்குகளுக்கான விரிவாக்கங்களையும் அவற்றின் சேவைகளையும் எழுதுக.

HTTP, IP, TCP, FTP, SMTP, ICMP

06. பின்வரும் இணைய சேவையகங்களின் செயற்பாடுகளை எழுதுக.
1) வலைச் சேவையகம்(web server)
2) அஞ்சல் சேவையகம்(Mail server)
3) ஆள்கள பெயர் முறைமை சேவையகம்(DNS Server)

07. பின்வரும் வலைமேலோடிகளின் பெயர்களை எழுதுக.

(1) (2) (3) (4) (5)



www.ikedu.lk

08. மின் அஞ்சல் ஒன்றை கையாளுவது தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு தரப்பட்ட சொற்பதங்களில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

Spam/Junk , Inbox , Sign in , Drafts , Sign Out ,Sign Up/Create an account ,

1. புதிய மின் அஞ்சல் கணக்கு ஒன்றை உருவாக்குவதற்கு .....தெரிவு செய்யப்படும்.
2. மின் அஞ்சல் முகவரி ஒன்றினுள் நுழைவதற்கு ..... தெரிவு செய்யப்படும்.
3. மின் அஞ்சலில் இருந்து வெளியேறுவதற்கு ..... தெரிவு செய்யப்படும்.
4. அனுப்பப்பட்ட மின் அஞ்சல்களை சேமித்து வைத்திருக்கும் இடம்.....
5. தேவையற்ற மின் அஞ்சல்கள் சேமிக்கப்பட்டிருக்கும் இடம் .....
6. அழிக்கப்பட்ட மின் அஞ்சல்கள் காணப்படும் இடம் .....
7. அனுப்புவதற்காக தயார் செய்யப்பட்டு முழுமைப்படுத்தப்படாத மின் அஞ்சல்கள் சேமிக்கப்பட்டிருக்கும் இடம் .....

09. அஞ்சல் அனுப்புவது தொடர்பான பின்வரும் சொற்பதங்களை கருத்திற்கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

Attachment , To , Subject, BCC, Send , Cc

i. ரவி என்பவர் குமாருக்கு மட்டும் மின்அஞ்சலை ஒன்றை அனுப்புவதாயின் குமாரின் மின்அஞ்சல் முகவரியினை எப்பகுதியினுள் இடுதல் வேண்டும்.
.....

ii. ரவி என்பவர் குமாருக்கு அனுப்பிய மின்அஞ்சலின் பிரதியை ஏனையோரும் அறியத்தக்கதாக சுரேசுக்கு அனுப்பவேண்டுமாயின் சுரேசின் மின்அஞ்சல் முகவரியினை எப்பகுதியினுள் இடுதல் வேண்டும்.
.....

iii. ரவி என்பவர் குமாருக்கு அனுப்பிய மின்அஞ்சலின் பிரதியை சுரேசுக்கும் கவிதாவுக்கும் அனுப்ப வேண்டியுள்ளது. ஆனால் சுரேசுக்கு அனுப்புவது கவிதாவுக்கு தெரியக்கூடாது ஆயின் ஒரு தடவையில் மின்அஞ்சலை அனுப்ப கவிதாவின் மின்அஞ்சல் முகவரியினை எப்பகுதியினுள் இடுதல் வேண்டும்.
.....

iv. மின்அஞ்சல் முகவரியினூடாக புகைப்படமொன்றை அனுப்புவதற்கு எதனை தெரிவு செய்தல் வேண்டும்.
.....

v. மின்அஞ்சல் தொடர்பான விடயக்குறிப்பை இட பயன்படுத்தப்பட வேண்டியது
.....

vi. மின்அஞ்சலை அனுப்புவதற்கு இறுதியாக தெரிவு செய்யப்படவேண்டியது
.....

www.ictcoi.lk

அலகு 03 - இணையம் மற்றும் மின்னஞ்சல்

விடைகள்

பகுதி - I

1	3	6	1	11	3
2	4	7	4	12	3
3	2	8	3	13	2
4	4	9	2	14	2
5	4	10	1	15	1

பகுதி - II

1)

1. உலகெங்குமுள்ள கணினி வலையமைப்புக்களின் சேர்க்கையாகும்.
2. இணையத்தில் இணைந்துள்ள ஒவ்வொரு கணினியையும் தனித்துவமாக இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்படும் அடையாளங்காட்டி.
3. இணைய வலையமைப்பிலுள்ள கணினிகளிடையே தகவல்களை ஊடுகடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் நெறிமுறையாகும்.
4. இணையத்தின் சேவைகள் பின்வருமாறு:
    - உலகளாவிய வலை
    - மின்னஞ்சல்
    - கோப்புப் பரிமாற்றம்
    - தொலை அணுகுகை
    - பல்லூடக ஓட்டம் (Multimedia Streaming)
    - தேடற்பொறி
5. இணையத்துடன் தொடர்புபட்ட உலகளாவிய கணினிகளில் தேக்கப்பட்டுள்ள இலத்திரனியல் ஆவணங்களின் தொகுப்பாகும்.
6. சேர். ரிம் பேர்னஸ் லீ
7. இணையத்தை அணுகுவதற்குப் பயன்படுத்தப்படும் பிரயோக மென்பொருள்.
8. பயனரின் அனுமதியின்றி அவரின் கணினியிலுள்ள தகவல்களைக் வேறொரு பயனர் களவாடுதல்.
9. தகவல்களைத் தேடுவதற்கு குறிப்பிட்ட இணையத்தள முகவரி தெரியாதவிடத்து தகவல்களைத் தேடுவதற்கு உதவும் செய்நிரல் ஆகும். இது வழங்கப்படுகின்ற முக்கிய சொல் அல்லது சொற்றொடருக்கு ஏற்ப உலகளாவிய வலையில் உள்ள வலைத்தளங்களைத் தேடி பட்டியலாகத் தரும்.
10. தேடற்பொறிகள் பின்வருமாறு:
    www.google.com www.yahoo.com www.ask.com
    www.msn.com www.bing.com
11. தொடர்பாடலுக்கு இணையத்தைப் பயன்படுத்தும் முறைகளாவன:
    மின்னஞ்சல்
    உடனடிச் செய்திகளை அனுப்புதல்
    காணொளிக் கருத்தரங்குகள்
    சமூக வலைத்தளங்கள்
    முகில் கணினி
12. இருவர் அல்லது ஒரு தொகுதியினருக்கிடையில் இலத்திரனியல் முறையில் இணையத்தினூடாக கடிதங்கள் மற்றும் கோப்புக்கள் பரிவர்த்தனை செய்தலே மின்னஞ்சல் எனப்படும்.
13. மிக விரைவானதும் செலவு குறைந்ததுமான தொடர்பாடல் முறையாகும். உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் எந்த நேரத்திலும் மின்னஞ்சலை அனுப்பவும் பார்வையிடவும் முடியும்.
    கடிதத்துடன் கோப்புக்களைப் பரிவர்த்தனை செய்ய முடிதல்.

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

14. பயனர் பெயர்
    @
    ஆள்களப் பெயர்
    (உ+ம்) deopointpedro@gmail.com
15. வெவ்வேறு இடங்களிலுள்ள இருவர் அல்லது பலர் தமக்கிடையே ஒலி, ஒளித்தரவுகளை ஊடுகடத்தி கணினி வலையமைப்பினூடாக கலந்துரையாடலை மேற்கொள்ளல் காணொளிக் கருத்தரங்காகும்.
16. காணொளிக் கருத்தரங்கை மேற்கொள்ள அவசியமானவை:
    கணினிகள்
    வலைக்கமரா
    இணையத் தொடர்பு
    தொடர்பாடல் மென்பொருள்
17. நபர்கள் இணையத்தினூடாக சமூகத் தொடர்புகளை மேற்கொள்ளும் முறையே சமூக வலைத்தளங்களாகும். இங்கு தனிப்பட்ட தகவல்கள், படங்கள், காணொளிகள், அன்றாட நடவடிக்கைகள் போன்றன பற்றிய தகவல்கள் பரிமாறிக்கொள்ளப்படும்.
    உ+ம் facebook
    twitter
    google+
    flickr
